செ.வெ.எண்: 201 நாள்: 23.03.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனா கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளுக்கு 1183 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டம், கொரோனா கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளுக்கு மாவட்டம் முழுவதும் 1183 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது :-

தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் கொரோனா நோய்த்தொற்று குறித்து கண்காணிக்கவும், பொதுமக்களிடையே கொரோனா நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், நியாய விலை அங்காடிகளை அடிப்படையாகக் கொண்டு, 1183 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வருவாய்த்துறை சார்பில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர், உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் ஊரகப் பகுதிகளில் ஊராட்சி செயலாளர்கள் மற்றும் உதவியாளர்கள், நகரப்பகுதிகளில் வரி வசூலிப்பவர்கள், சுகாதாரத்துறை சார்பில் சுகாதார அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், நியாய விலை கடை பணியாளர்கள் ஆகியோர் கொரோனா கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். கொரோனா கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழு உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து கடந்த ஒரு மாதத்தில் வந்தவர்களை கண்காணித்து, அவர்களின் உடல்நலம் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு குழுவினரும் தங்கள் பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் கை கழுவுதல், முககவசம் மற்றும் கையுறை பயன்படுத்துதல், கைசுத்தகரிப்பான் பயன்படுத்துதல், இல்லங்கள் மற்றும் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரோனா விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு மூலமாக ஒவ்வொரு பகுதியிலும் தன்னார்வ அமைப்பினர், ஓய்வுபெற்ற அலுவலர்கள், இளைஞர்கள் ஆகியோர் கொண்ட வாட்ஸ்-அப் குழு தொடங்கப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகளின் நடவடிக்கைகளை வாட்ஸ்-அப் குழுக்கள் மூலம் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 1183 கொரோனா கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழுக்களின் செயல்பாடுகளை கண்காணித்திட மாவட்டம் முழுவதும் மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட 15 கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கொரோனா நோய்த்தொற்று குறித்த புகார்கள் மற்றும் சந்தேகங்களுக்கு 9345336838 என்ற எண்ணில் வாட்ஸ்-அப் மூலமாகவும், 1077 என்ற கட்டணமில்லா எண்ணில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறையினை தொலைபேசி மூலமாகவும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்.

எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கொரோனா நோய் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு தொடர்பான மத்திய மற்றும் மாநில அரசுகளின் வழிகாட்டுதலை பின்பற்றி, மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.